**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

<u>அசல் வழக்கு எண்.49/2020</u>

**<u>DW2</u>**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.தனசேகர் | த/பெ.திரு.சுப்பராயன் | நாள் 25.02.2026 |

<u>பி.வா.சா.2 அழைக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

வாதிகளின் தகப்பனாரும், என்னுடைய தகப்பனாரும் அண்ணன், தம்பிகள் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் சாமிக்கவுண்டர் என்றால் சரிதான். சர்வே எண்.128/5 க்கு என் தாத்தா பெயரில் எந்த வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.128/5 என் தாத்தாவுக்கு பூர்வீக சொத்தா என்றால் இல்லை. சாமிக்கவுண்டரின் வாரிசுகளில் ஒருவரான கோவிந்தராஜீம், அவருடைய வாரிசும் சேர்ந்து தான் 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு 128/5 ல் 24 செண்ட் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.12 குடும்ப முன்னோர் வழியாக எங்கள் பாகத்திற்கு கிடைத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். சாமிக்கவுண்டருக்கு பூர்வீகம் இல்லை என்றால் அவரது மகனான கோவிந்தராஜீக்கு பூர்வீகம் வராது என்றால் வராது. பாலகிருஷ்ணனும், கோவிந்தராஜீம் வண்டிக்காரர் என்ற ரங்கசாமி என்பவரிடமிருந்து 50 செண்ட நிலத்தை பாலகிருஷ்ணன் என்பவரிடம் கிரையம் வாங்கி 128/5 ல் கோவிந்தராஜீ அனுபவம் செய்து வந்தார். பாலகிருஷ்ணன் கிரையம் வாங்கிய 50 செண்டை எங்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்.

3. பாலகிருஷ்ணன் வண்டிக்காரர் என்ற ரங்கசாமியிடம் எந்த ஆண்டு கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அதன் ஆவண எண்ணும் தெரியாது. அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. உண்மையிலேயே பாலகிருஷ்ணனும், கோவிந்தராஜீம் கிரையம் வாங்கி இருந்ததால் தான் அந்த

சொத்தை பிரித்து கொள்ள முடியும் என்றால் சரிதான். அவ்வாறு அவர்கள் கிரையம் வாங்கியிருந்ததால் தான் எங்களுக்கு அவர்கள் விற்பனை செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. கோவிந்தராஜீம், பாலகிருஷ்ணனும் தாவா சொத்தை அனுபவம் செய்ததற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.128/5 சொத்துக்கான பட்டா பாலகிருஷ்ணன், கோவிந்தராஜ் பெயரில் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. பாலகிருஷ்ணன், கோவிந்தராஜ் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. பி.வா.சா.ஆ.12 ல் சொத்துக்கு அவர்கள் பெயரில் பட்டா இருப்பதற்கு குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.128/5 க்கும், சாமிக்கண்ணுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.128/5 ஐ பாலகிருஷ்ணனும், கோவிந்தராஜீ பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றால் என்னிடம் எந்த ஆவணமும் இல்லை. சர்வே எண்.128/5 கோவிந்தராஜீ மற்றும் பாலகிருஷ்ணனுக்கும் பூர்வீக சொத்து கிடையாது என்றால் சரிதான். சர்வே எண்.128/5 பாலகிருஷ்ணன் மற்றும் கோவிந்தராஜீ ஆகியோர்களுக்கு சுய சம்பாத்திய சொத்து இல்லை என்றால் சரியல்ல. பாலகிருஷ்ணன் மற்றும் கோவிந்தராஜீ ஆகியோர் பெயரில் எந்த ஆவணமும் இல்லாமல் 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.12 செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்.128/5 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.128/5 ல் 24 செண்டை பொறுத்து பி.வா.சா.ஆ.12 ன் அடிப்படையில் நாங்கள் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை, இல்லை.**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)